CIBA Extension Series No. 45

# கொடுவாமீன் வளர்ப்போம் கோடி நன்மை பெறுவோம்

## வரைபடக் கையேடு

ஆக்கம்
முனைவர். (திருமதி) த. தெபோராள் விமலா
முனைவர். அ.ரெ. திருநாவுக்கரசு
முனைவர். மு. கைலாசம்
முனைவர். மா. குமரன்
முனைவர். தி. ரவிசங்கர்



**மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்**
இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம்
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்
சென்னை- 600 028.

செப்டம்பர் 2013

வெளியீட்டாளர் : **முனைவர். ஏ.ஜி. பொன்னையா**
இயக்குநர்,
மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்,
(இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம்)
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 600 028.

CIBA Extension Series No. 45

# கொடுவாமீன் வளர்ப்போம் கோடி நன்மை பெறுவோம்

## வரைபடக் கையேடு

ஆக்கம்
முனைவர். (திருமதி) த. தெபோராள் விமலா
முனைவர். அ.ரெ. திருநாவுக்கரசு
முனைவர். மு. கைலாசம்
முனைவர். மா. குமரன்
முனைவர். தி. ரவிசங்கர்

**மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்**
இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம்
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்
சென்னை- 600 028.



செப்டம்பர் 2013

# முகவுரை

"கொடுவா மீன்வளர்ப்போம் : கோடி நன்மை பெறுவோம்" என்ற இந்த வரைபடக் கையேட்டில் கொடுவாமீனை நாற்றங்கால், தொட்டி, குட்டை மற்றும் வலைக்கூண்டுகளில் வளர்த்தல் குறித்த தொழில்நுட்பத் தகவல்கள் எளிய தமிழில் கதை வடிவத்தில் கூறப்பட்டுள்ளது. கொடுவாமீன் வளர்ப்பு சம்பந்தமான அறிவியல் கருத்துக்களை எந்த ஒரு நபரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ள இந்த வரைபடக் கையேடு தொழில் நுட்ப விரிவாக்கத்தில் ஒரு புதிய முயற்சி.

கொடுவாமீன் வளர்ப்பு குறித்து அறிந்து கொள்ள உதவும் இவ்வரைபடக் கையேடு மீன் வளர்ப்போர், சுயஉதவிக் குழுக்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், அரசு சார்ந்த பிற ஆராய்ச்சி நிறுவனங்கள் என அனைத்து தரப்பினருக்கும் உதவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இவ்வரைபட கையேட்டில் கூறப்பட்டுள்ள கொடுவாமீன் வளர்ப்பு தொழில் நுட்பங்கள் மீன் வளர்ப்போரை சென்றடைவதோடு, அவர்கள் கொடுவாமீன் வளர்ப்பில், புதிய வழிமுறைகளைக் கையாண்டு சாதனை படைக்க உறு துணையாய் இருக்கும் என நம்புகிறேன்.

மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தின் விரிவாக்கத்துறை மற்றும் மீன் வளர்ப்புத்துறை ஆராய்ச்சியாளர்கள் இணைந்து எழுதியுள்ள அவர்களின் கூட்டு முயற்சிக்கு எனது பாராட்டுகள்.

இடம் : சென்னை – 28


தேதி : 17 செப்டம்பர் 2013


ஏ.ஜி. பொன்னையா


இயக்குநர்



அட! ஏன் மச்சான்? ஒலகமே இடிஞ்ச மாதிரி வருத்தப்படற?
அட போ புள்ள! மழையில்லாம வெள்ளாம இல்ல, வேற தொழிலோ கைவசம் இல்ல, எங்க திரும்பினாலும் கடன் கொடுத்தவனோட தொல்ல...
இல்ல.. இல்ல.. இல்ல... வேற வார்த்தையே இல்லையா மச்சான்? உன்கிட்ட உழைப்பு இருக்கு.. திறம இருக்கு மறந்திராத... மச்சான்
அம்மா... அம்மா... தங்கச்சி மீனா தூத்துக்குடியில மீன்வள கல்லூரி படிப்ப வெற்றிகரமா முடிச்சிட்டு வந்திருக்கா!! போம்மா... போ! போய் ஆரத்தி கரைச்சிட்டு வா!!
வாம்மா... மீனா...
ஏம்பா வருத்தமா இருக்கீங்க ??
மீனா, இந்த வாட்டி வெள்ளாம இல்லாதனால வேற என்ன தொழில் பண்ணலாம்னு யோசிக்கிறோம்மா ?



அப்பா, நான் தூத்துக்குடி மீன்வள கல்லூரில படிச்சுக்கிட்டு இருந்தப்ப, எங்கள சில மீன்வள ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு கூட்டிகிட்டுப் போனாங்க...
போன வருஷம் தான மீனா ?
CIBA (ICAR)
ஆமாண்ணா ! அதுல சென்னையில உள்ள மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையமும் ஒன்னு. ஆங்கிலத்துல சுருக்கமா 'சிபா'ன்னு சொல்லுவாங்க...
சிபாவுல என்ன கண்ணு பாத்த? அங்க என்ன செய்றாங்க??
சிபாவுல, உவர்நீர் நிலைகளில் மீன்களையும், இறால்களையும், நண்டுகளையும் வளக்க ஏற்ற தொழில்நுட்பங்களை சொல்லித் தர்றாங்க...
அப்படியா?? அப்ப என்னென்ன மீன்கள வளக்கலாம்?
கொடுவா மீன், கடல்விரால் மீன், பால்கெண்டை மீன், பாட்டா மீன் மற்றும் மடவை மீன் இத எல்லாம் வளர்க்க சொல்லித் தர்றாங்கம்மா.
அடி யாத்தி! ஆமா கொடுவா மீன் நல்ல கிராக்கி உள்ள மீனாச்சே! அதுல என்ன செய்யறாங்க?
தரமான கொடுவா மீன் குஞ்சுகள பொரிப்பகத்துல எப்படி உற்பத்தி பண்றது', உற்பத்தி பண்ணின தரமான கொடுவா மீன் குஞ்சுகள, மீன் விவாசாயிகளோட குளத்துல வளக்கிறதுக்கு ஏத்த தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு சொல்லிக் கொடுத்து, அவுங்களுக்கு பக்கபலமா இருந்து, விவாசாயிகளோட பண்ணைகள்ல 'சிபா' பண்ணின சாதனைகள அதாவது வெற்றிக் கதைகள கேட்டோம். வளர்ப்பு முறைகள நேர்லேயே பாத்தோம்மா.



எந்தெந்த முறைகள்ல கொடுவாமீன்களை வளக்கலாம்னு சொன்னாங்களாமா ?
கொடுவா மீன்குஞ்சுகள குட்டையில வளக்கிறது எப்படி மீனா?
ஆமாம்பா ! நாற்றங்கால்ல கொடுவா மீன்குஞ்சுகள வளக்கிற விதம், அதாவது தொட்டிகள்ல வளக்கிற விதம், வலக்கூண்டுகள்ல வளக்கிறது, குட்டையில வளக்கிற விதம் பத்தி சிபா மீன் வளர்ப்பு துறையில உள்ள விஞ்ஞானிகள் ரொம்ப தெளிவா சொன்னாங்கப்பா!
அண்ணா! கொடுவா மீன் குஞ்சுகள உவர்நீர் குட்டையிலும் நன்னீர் குட்டையிலும் வளக்கலாம்.



தண்ணி குட்ட எவ்வளவு பெருசா இருக்கனும் கண்ணு ?
SEABASS HATCERY
குட்ட 200 – 500 ச.மீ. பரப்பு இருக்கலாம். ஆனா தண்ணியோட ஆழம் 75–100 செ.மீ. இருக்கனும்.
கொடுவா மீன் குஞ்சுகள எங்கியிருந்துமா பிடிக்கனும் ?
மீன் குஞ்சுகள எங்கேயும் பிடிக்க வேண்டாம்பா. சிபா பொரிப்பகத்துலேயே உண்டாக்குறாங்க.



அப்படியாமா? ஆனா சிபா விஞ்ஞானிகள் நமக்கு தருவாங்களா?
சிபா மீன்துறை ஆராய்ச்சிகள் மீன் விவசாயிகள்கிட்ட வந்தடையனுங்கிற எண்ணத்தோடதாம்பா பாடுபடுறாங்க! நாங்க சிபாவுக்கு போனப்ப சில மீன் விவாசாயிகள் கிட்டத்தட்ட முக்கா செ.மீ.ல இருந்து ஒரு செ.மீ. நீளமுள்ள கொடுவா மீன்குஞ்சுகளை வாங்கிட்டு போனாங்க.



சிபா பொரிப்பகத்துல இருந்து வாங்குற மீன்குஞ்சுகள எப்படி மீனா நம்ம பண்ணைக்கு கொண்டு வர்றது...?
கொடுவா மீன் குஞ்சுகள பாலிதீன் பையில போட்டு பிராணவாயு அடைச்சு தருவாங்கண்ணா...
ஏன் கண்ணு! தீவனம் என்ன கொடுக்கனும்? எப்படி கொடுக்கனும் ?
அம்மாடி குட்டயில மீன்குஞ்சுகள விடறதுக்கு முன்னால ஏதாச்சும் செய்யனுமா??
ஆமாம்பா ! கொடுவா மீன் குஞ்சுகள நம்ம குட்டையில உள்ள தண்ணியோட வெப்பநிலை, உப்பு தன்மைக்கு கொஞ்ச நேரம் ஒத்துப்போக வைக்கனும். அப்பறம் மீன்குஞ்சுகள மெதுவா குட்டையில விடலாம். ஒரு ச.மீட்டருக்கு (ஒரு செ.மீ. நீளமுள்ள) 50–100 மீன் குஞ்சுகளை விடலாம்.
தீவனமா வெல கொறவா உள்ள ஜிலேபி மீன்கள வேகவைச்சு சின்ன துண்டுகளாக்கி மசிச்சு கொடுக்கலாம். இல்லாட்டி தயாரிக்கப்பட்ட தீவனத்த மொத்த மீன் குஞ்சுகளின் எடைக்கேத்தாப்பில 8 – 10 சதவீதம் வரை கொடுக்கலாம்.
சிபா தீவனம் பெட்கி ஆஹார்
ஏம்மா எறாவுக்கு கொடுக்கிற மாதிரி தயாரிக்கப்பட்ட தீவனம் கொடுவா மீனுக்கு எங்க கெடைக்கும்??
சென்னையில உள்ள ‘சிபா’ வுல வேல பாக்கிற சத்தூட்டவியல்துறை விஞ்ஞானிகள் ‘பெட்கி ஆஹார்’ என்கிற கொடுவா தீவனத்த ஆராய்ச்சி மூலம் உருவாக்கியிருக்காங்க, அவங்ககிட்டயே வாங்கிக்கலாம்.



மீன் குட்டையில வேற என்ன பராமரிப்பு செய்யனும் கண்ணு ?
தண்ணியோட அளவு ஒரு மீட்டர் ஆழம் குறையாம பார்த்துக்கனும்!. தீவனம் ஒரு நாளைக்கு 3/4 தடவ கொடுக்கனும். நல்லா பராமரிக்கனும்.



மீனா கொடுவா மீனோட பிழைப்புத்திறன் எவ்வளவு இருக்கும்? குஞ்சு எவ்வளவு பெரிசா வளரும்?
சரியா சொல்லப்போனா... 20–25 நாட்கள்ல கிட்டத்தட்ட உயிர் பிழைப்புத் திறன் 60–80% வரை சாத்தியம் இருக்கு. சுமாரா 8–10 செ.மீ. நீளம் வளரும்.
ஒரு கொடுவா மீன் ஒரு கிலோ வளர்வதற்கு எவ்வளவு தீவனம் கொடுக்கனும்? எத்தனை மாசம் வளக்கனும் மீனா?
அண்ணா! பெட்கி ஆஹார் தீவனத்த விரும்பி உட்கொண்டு 8–9 மாதங்கள்ல ஒரு கிலோ எடை வளர்ந்ததா சிபா ஆராய்ச்சி நிலையத்துல சொன்னாங்கன்னா அதாவது ஒரு கொடுவா மீன் ஒன்றரையிலிருந்து ஒன்னே முக்கால் கிலோ வரை பெட்கி ஆஹார் தீவனத்தை உட்கொண்டு ஒரு கிலோ வரை வளர்ந்திரும்னு சென்னாங்கண்ணா.



விரலளவு உள்ள மீன் குஞ்சுகள எப்படிமா விக்கறது?
இந்த விரலளவு, கொடுவா மீன் குஞ்சுகள நம்ம பண்ணையிலேயே வளக்கலாம். ஒரு கொடுவா மீன்குஞ்ச சுமார் ரூ. 10 – 15 வர விக்கலாம்பா
இன்னொரு சேதி தெரியுமா கொடுவா மின் குஞ்சுகள விரலளவுக்கு வளர்த்துக் கூட பிறகு விக்கலாம்
ஏன் கண்ணு! இந்த விரலளவு மீன் குஞ்சுகள பெரிய பண்ணை அல்லது சின்ன குட்ட வச்சிருக்கவுங்க தான் வளர்க்க முடியுமா?
இல்லமா பண்ணை அல்லது குட்டை அமைக்க வாய்ப்பில்லாதவங்க கூட சின்ன வலைக் கூண்டுகள குளம் அல்லது குட்டையில் கட்டியோ அல்லது திறந்த வெளிநீர் நிலைகள்ள வலைக் கூண்டுகளை கட்டியுங்கூட அதுல கொடுவா மீன் குஞ்சுகளை வளக்கலாம்.



ஆமா மாபிள்ள! போய் பாத்தேன். இரண்டு மீட்டர் ஆழத்துக்கு கொறயாம நீர் நிலைக இருந்தா தாராளமா வலக்கூண்டு அமைச்சு வளக்கலாம்.
ஆமா மாமா! வலக்கூண்டு வழியா தண்ணி வந்து போகும்போது இயற்க்கையான சூழல் மீன்களுக்கு கெடைக்குது. மீன்களும் வேகமா வளரும். அதிகமாவும் இருப்புச் செய்யலாம்.
அட வாங்க மச்சான்! சரியான நேரத்துல வந்தீங்க!! கொஞ்ச நாள் முன்னால உங்க சகல வலக்கூண்டுல கொடுவாமீன் வளக்குறார்ன்னு சொன்னீங்களே ! இப்ப வளக்குறாரா ?



அளவு – 10–15மிமீ
இருப்படர்த்தி–500/கனமீட்டர்
தீவனம் – இரால் / இரால் இறைச்சி பூச்சிகள்
ஆமா! மீனா. ஒரு சதுர மீட்டருல 500 கொடுவா குஞ்சுகள இருப்புச் செய்யலாம். என்னோட சகலபாடி 2 x 1 x 1மீ அளவுல கொசுவல அல்லத நைலான் ஹாப்பாக்கள நீர் குட்டையிலோ அல்லது நீர் பரப்புலையோ கூண்டு அமைச்சு வளக்கலாம்னு சொன்னான். சரிதானாமா ?
அதுமட்டமில்ல மாமா, வலைக் கூண்டுகள நீர் குட்டைகளில் அமைச்ச பின்னால, 10–15 மில்லிமீட்டர் அளவுள்ள கொடுவா மீன் குஞ்சுகள பொரிப்பகத்துல இருந்து வாங்கிட்டு வந்து ஒரு கனமீட்டருக்கு 500 குஞ்சுகள இருப்பு செஞ்சு தயாரிக்கப்பட்ட தீவனப்பொடியோ, இரால் இறைச்சி, மீன் இறைச்சியோ அல்லது பக்கத்து நீர்நிலைகள்ல உள்ள சின்ன இரா, அசிடஸ், மைசிஸ் மற்றும் டாபினியா, மொய்னா போன்ற பூச்சிகள எல்லம் பிடித்து கொடுத்து வளத்தா கூடுதல் பிழைப்புத் திறன் கெடைக்கும். ஆனால் வாரத்திற்கு இரண்டு முறை கண்டிப்பா தரம்பிரிச்சு, ஒரே அளவுள்ள மீன் குஞ்சுகள ஒரே வலைக்கூண்டில் விட்டு வளக்கனும் மாமா.



எதுக்காக மீனா ? வாரத்துக்கு ரெண்டு தடவ கொடுவா மீன் குஞ்சுகள தரம் பிரிச்சு வளக்கனும்?
சபாஷ் சரியான கேள்வி அப்பா! பெரிய கொடுவா மீன்கள் சின்ன மீன் குஞ்சுகள பிடிச்சு அப்புடியே தின்னுரும் அதுனால மீன்குஞ்சுகளோட எண்ணிக்க கொறஞ்சிடும். ஆக, இந்த மீன்கள் நாற்றங்கால்ல வளர்கும்போது ஒரே அளவுள்ள மீன்களா பிரிச்சு எடுத்து வளக்கறது ரொம்ப முக்கியம்


வள்ளி! தொட்டில வளத்தா தண்ணி விடவும் வெளியேத்தவும் சரியான அமைப்பு இருக்கனுமுல?
ஏன் கண்ணு? குட்டை, வலக்கூண்டு இரண்டுலையும் தான் வளக்க முடியுமா ? ஏன் தொட்டி கட்டி வளக்க கூடாதா??
தீவனம்: இரால் / மீன் இறைச்சி
நீர்மாற்றம்– 30–40%
தரம்பிரித்தல் – 4–5 நாளுக்கு ஒரு தடவை
45–60 நாட்களுக்கு – 7–8 செ.மீ வளர்ச்சி
பிழைப்புத்திறன் – 65%
கரெக்ட் மாமா! தொட்டில் வளர்க்கும்போது ஒரு கனமீட்டருக்கு 500–600 குஞ்சுகள இருப்பு செய்யலாம். தயாரிக்கப்பட்ட தீவனம் அல்லது எறா அல்லது மீன் எறச்சி கொடுத்து, ஒவ்வொரு நாளும் 30–40% தண்ணிய மாத்தி, 4–5 நாளுக்கு ஒரு தடவ தரம் பிரிச்சு வந்தா, 30 நாட்களுக்குள்ள 7–8 செ.மீ. அளவுள்ள விரால் கெடைக்கும் பிழைப்புத்திறன் 65% வர இருக்கும்



விற்பனைக்கு ஏத்த பெரிய மீனாக வளக்க என்ன செய்யனுமா ?
அது ஒன்னும் கஷ்டம் இல்ல மாமா. கொடுவாமீன் விரலிகளையோ, இளம் மீன்களையோ பண்ணைகளிலோ அல்லது வலைக்கூண்டுகளிலோ பெருமீனா தாராளமா வளர்க்கலாம்.


ஒரு ஹெக்டர் பண்ணைல 50–100கி எடையுள்ள கொடுவா மீனும் எத்தனைய இருப்புச் செய்யலாம் ? எப்ப அறுவடை செய்யலாம்.
6000–7000 மீனுக வர இருப்புச் செய்யலாம். 7–8 மாசத்துல கிட்த்தட்ட ஒரு கிலோ எடையுள்ள கொடுவா மீன் கிடைக்கும்


சரியா சொன்னீங்க மாமா. கொடுவா மீன் குஞ்சு வளர்ப்புல பெரிய பிரச்சனையே இதுதான்.
மீனா! கொடுவா மீன் தன் இனத்த தானே தின்னுரதால சின்ன குஞ்சுகள பெரிய குஞ்சுக தின்னா பிழைப்புத் திறன் கொறையும் இல்லையா??
அத எப்படிமா சாமாளிக்கிறது?
இத தவிர்க்கலாம் மாமா! எப்படீனா வளக்கும்போதே ஒரே அளவுள்ள கொடுவா மீன் குஞ்சுகள 5 நாளைக்கு ஒரு தடவை தரம் பிரிக்கனும். ஒரே அளவுடைய குஞ்சுகளை தொட்டிகளிலோ அல்லது வலக்கூண்டுகளிலோ விட்டா நல்ல பிழைப்புத் திறன் கெடைக்கும்


ஒரு கிலோ கொடுவா மீன் உற்பத்தி செய்ய எவ்வளவு செலவாச்சு உங்க சகலைக்கு ?
மாப்பிள்ள! என் சகலைக்கு ரூ.140-150 வர செலவு ஆயிருக்கு. விற்பன வெல கிலோவுக்க ரூ.350 - 450 வர கெடச்சிருக்கு.


சிபாவோட விலாசம், தொலைபேசி எண் விவரம் வேணும் மீனா. என் நண்பர்களுக்கும் சொல்லனும்
சிபா
தொலைபேசி எண்.
044 - 24618817
044 - 24616948
044 - 24610565
இயக்குநர், மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600 028.
தொலைநகல்: +91-044-24610311
மின்னஞ்சல் : director@ciba.res.in., மின்தளம்: www.ciba.res.in


மீன்பிடி தொழிலுக்கு போக முடியாத மீனவர்கள் கூட கொடுவா மீனை வளர்த்து வருமானம் பெறலாம் இல்லையாப்பா?
ஆமாம் ராமு. சென்னையில, சிபாங்கிற ஆராய்ச்சி நிறுவனத்துல கொடுவா மீன் எப்படியெல்லாம் வளக்கிறாங்கங்கிற கண்ணால பாத்த என் மவ ஒரு பாடமே நடத்திட்டா வள்ளி..
அது மட்டும் இல்லீங்க... கொடுவா மீன் வளர்க்கனும்ங்கிற ஆர்வமும், தைரியமும் நமக்கு கெடச்சிருக்கு.
அடடே ! வந்த விஷயத்த சொல்ல மறந்திட்டு கொடுவா மீன் வளர்ப்பு பத்தியே பேசிகிட்டு இருந்துட்டேன்.
சொல்லுங்க மாமா!!
அம்மா மீனா உன் முற மாப்பிள்ளை சேதுவுக்கு பட்டுகோட்டையில மீன் வள ஆய்வாளர் பதவிக்கான ஆர்டர் வந்திருக்கு. உங்க அத்த நேர்ல போய் சொல்லிட்டு வர சொல்லுச்சு
அப்ப கல்யாண ஏற்பாட தொடங்க வேண்டியதுதான். அடடே மாப்பிள்ளையே வந்துட்டாரு.
அப்பா! மீன்வள ஆராய்ச்சி நிலையத்தோட தொழில்நுட்பங்கள், மீன் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் அடைய மீனா கொடுத்த இந்த எளிய பயிற்சி! நல்ல முயற்ச்சி!!
சேது! இவ்வளவு நேரம் என்னோட மருமவ கொடுவா மீன் வளர்ப்பு பத்தி ஒரு பயிற்ச்சியே கொடுத்துட்டாப்பா
அத்தான்! கொடுவா மீன் வளர்க்கப் போற நமக்கு கோடி நன்மை தேடிவரப்போகுது!
கொடுவா மீன் வளக்க நாங்க ரெடி நீங்க ரெடியா ?


CIBA CIBA
KAKDWIP RESEARCH CENTRE, CIBA, ICAR
ICAR
ciba

# மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்
## (இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம்)

தலைமை அலுவலகம்

இயக்குநர்

மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்

75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்

சென்னை- 600 028.

தொலைபேசி : 2461 8817

2461 6948

2461 0565

தொலைநகல் : 91-44-2461 0311

மின் அஞ்சல் : director@ciba.res.in

இணைய வலைதளம் : www.ciba.res.in

முட்டுக்காடு பரிசோதனை நிலையம்

பொறுப்பு அலுவலர்

சிபா முட்டுக்காடு பரிசோதனை நிலையம்

கிழக்கு கடற்கரை சாலை, கோவளம் அஞ்சல்,

முட்டுக்காடு - 603 112. காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு

தொலைபேசி : 91-044-2 7472425, 2 7472061

முட்டுக்காடு பரிசோதனை நிலையம்



கொடுவாமீன் பொரிப்பகம்

